RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை மலர்-4 இதழ்- 325 நவம்பர்.25 2025 செவ்வாய்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ. 5

## செங்கோட்டையனின் கோட்டையில் நவ.30ல் 'மாஸ்' காட்ட பழனிசாமி திட்டம்



சென்னை, நவ.25-

அதிமுகவிலிருந்து நீக்கப்பட்ட செங்கோட்டையனின் கோட்டையான கோபிசெட்டிபாளையத்தில் நவ.30ம் தேதி பிரம்மாண்ட பொதுக்கூட்டத்தை நடத்த கட்சியின் பொதுச் செயலாளர் பழனிசாமி திட்டமிட்டுள்ளார்.

அதிமுக ஒருங்கிணைப்பு குறித்து முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர் செல்வம், டிடிவி தினகரன், சசிகலா போன்றோர் குரல் கொடுத்து வந்தாலும், அதற்கு வாய்ப்பே இல்லை என பழனிசாமி கூறி வருகிறார். கட்சி ஒருங்கிணைப்பு என்பது உட்கட்சி விவகாரம். அதில் தலையிடமாட்டோம் என பாஜகவும் தனது நிலைப்பாட்டை தெரிவித்துவிட்டது.

ஆனால் தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் அதிமுக ஒன்றிணைந்தால் நல்லது என சொல்லி வருவதாக கூறப்படுகிறது. இந்நிலையில், கட்சி ஒன்றிணைப்பை வலியுறுத்தி, பழனிசாமிக்கு காலக்கெடு விதித்த அதிமுக முன்னாள் அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன், ஓ.பன்னீர்செல்வம், டிடிவி தினகரனை சந்தித்த நிலையில், கட்சியிலிருந்து நீக்கப்பட்டார்.

கட்சியில் இருந்த எம்ஜிஆர் காலத்து மூத்த அரசியல்வாதி அவர் மட்டும் தான். அவரை நீக்கினால் கட்சிக்கு பாதிப்பு ஏற்படும் என அதிமுக கூட்டணி கட்சிகளும், அதிமுக தொண்டர்களும் கருதக்கூடும். அதனால் செங்கோட்டையனின் கோட்டையான ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையத்தில் யாருக்கு பலம் என்பதை நிரூபிக்கும் வகையில் வரும் நவ.30ம் தேதி அங்கு பிரம்மாண்ட பொதுக்கூட்டத்தை பழனிசாமி நடத்த திட்டமிட்டுள்ளார்.

பழனிசாமி கடந்த ஜூலை மாதம் முதல் மேற்கொண்டு வரும் 'மக்களை காப்போம்: தமிழகத்தை மீட்போம்' சுற்றுப்பயணத்தின் தொடர்ச்சியாக இந்த பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது. இந்த பொதுக்கூட்டத்தில் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்கும் வகையில் பிரமாண்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக அதிமுக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பழனிசாமி மேற்கொண்டு வரும், 'மக்களை காப்போம்: தமிழகத்தை மீட்போம்' சுற்றுப்பயணத்தில் இதுவரை 5 கட்டங்களாக 174 தொகுதிகளில் கலந்துகொண்டு சுமார் 11 ஆயிரம் கிமீ சுற்றுப்பயணம் செய்திருப்பதாக அதிமுகவினர் தெரிவித்துள்ளனர். டிச.10ம் தேதிநடைபெறும் அதிமுக பொதுக்குழு கூட்டத்துக்கு பிறகு சுற்றுப்பயணத்தை மீண்டும் தீவிரப்படுத்த பழனிசாமி திட்டமிட்டிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

## இதுவரை 6.16 கோடி பேருக்கு படிவம் வழங்கப்பட்டுள்ளது: தலைமை தேர்தல் அதிகாரி பேட்டி



சென்னை, நவ.25-

இதுவரை 6.16 கோடி பேருக்கு படிவம் வழங்கப்பட்டுள்ளது என தலைமை தேர்தல் அதிகாரி பேட்டியளித்துள்ளார்.

இதன் பின்னர் செய்தியாளர்களுடன் பேசிய அவர்,

தமிழகத்தில் எஸ்.ஐ.ஆர். பணிகளுக்கு கணக்கீட்டுப் படிவம் வழங்கும் பணிகள் டிச. 4 வரை தொடரும். அனைவரும் கண்டிப்பாக படிவத்தை நிரப்பித் தர வேண்டும். முடிந்தவரை தகவல்களை நிரப்பி கொடுக்க வேண்டும்.


இதுவரை 6.16 கோடி வாக்காளர்களுக்கு படிவங்கள் வழங்கப்பட்டுள்ளன. 50% படிவங்கள் நிரப்பிய நிலையில் திருப்பி பெறப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் இந்த பணிகளில் 83,256 அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர். இதில் 68,000 பேர் பிஎல்ஓக்கள். மேலும் 33,000 தன்னார்வலர்கள், 2,45,340 கட்சி ஏஜெண்டுகள் இந்த பணிகளில் ஈடுபட்டுள்ளனர். இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் எஸ்ஐஆர் பணிகளில் அதிகம் பேர் ஈடுபட்டுள்ளனர்.

தகுதியுள்ள ஒவ்வொரு குடிமகனும் வாக்காளர் பட்டியலில் இருக்க வேண்டும். வரைவு பட்டியலில் இடம்பெறாதவர்கள் வாக்காளர் பட்டியலில் சேர்க்க உரிய அவகாசம் சேர்க்கப்படும்.

வரைவு வாக்காளர் பட்டியல் வெளியான பிறகு விடுபட்டவர்கள் கண்டிப்பாக சேர்க்கப்படுவார்கள். ஆன்லைனில் படிவங்கள் பெறப்பட்டு வருகின்றன. கணக்கீட்டுப் படிவங்களில் தகவல்கள் சரியாக இருந்தால் எந்த படிவமும் நிராகரிக்கப்பட்டது. யாருடைய பெயரையும் காரணமின்றி நீக்க முடியாது. பட்டியலில் இருந்து நீக்கப்பட்டால் கண்டிப்பாக காரணம் தெரிவிக்கப்படும். எஸ்ஜஆர் பணிகளுக்கு கூடுதல் கால அவகாசம் வாய்ப்பில்லை" என்று பேசினார்.

## கியூஆர் கோடு, புகைப்படத்துடன் புதிய ஆதார் அட்டை




புதுடெல்லி, நவ.25-

ஆதார் அட்டை தவறாக பயன்படுத்தப்படுவதை தடுக்க வரும் டிசம்பரில் புதிய விதிகளை அமல்படுத்த இந்திய தனித்துவ அடையாள ஆணையம் (யுஐடிஏஐ) திட்டமிட்டுள்ளது. இதன்படி வருங்காலத்தில் ஆதார் அட்டையில் புகைப்படம், கியூஆர் கோடு மட்டுமே இடம்பெறும்.

இதுகுறித்து, யுஐடிஏஐ தலைமை செயல் அதிகாரி புவனேஷ் குமார் அண்மையில் ஆன்லைன் மூலம் நடைபெற்ற கருத்தரங்கில் கூறியதாவது: அரசு, தனியார் நிறுவனங்கள் சார்பில் பல்வேறு பணிகளுக்காக பொதுமக்களிடம் ஆதார் அட்டை நகல்கள் கோரப்படுகிறது. இதன்மூலம் தனிநபர், நிறுவனங்களுக்கு பொதுமக்களின் ஆதார் விவரங்கள் கிடைக்கின்றன. குறிப்பாக ஓட்டல்கள், மொபைல் போன் சிம் விற்பனையாளர்கள், கருத்தரங்குகளை நடத்துவோருக்கு ஆதார் விவரங்கள் கிடைக்கின்றன. இதை சிலர் தவறாக பயன்படுத்தி ஆன்லைன் மோசடிகளில் ஈடுபடுகின்றனர்.

ஆதார் அட்டை தவறாக பயன்படுத்தப்படுவதை தடுக்க வரும் டிசம்பரில் புதிய விதிகள், மாற்றங்களை அமல்படுத்த திட்டமிட்டு உள்ளோம். முதல்கட்டமாக ஆதார் செயலி அறிமுகம் செய்யப்பட உள்ளது. தற்போது நடைமுறையில் உள்ள எம்ஆதாருக்கு பதிலாக புதிய செயலி அறிமுகம் செய்யப்படும். இதன்மூலம் எந்தவொரு இடத்திலும் பொதுமக்கள் ஆதார் நகலை கொடுக்க வேண்டிய அவசியம் இருக்காது. ஆதார் செயலி வாயிலாக டிஜிட்டல் முறையில் தகவல்களை அளிக்க முடியும்.

அடுத்த கட்டமாக ஆதார் அட்டையில் புகைப்படம் மற்றும் கியூஆர் கோடு மட்டுமே அச்சிட்டு வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும். குறிப்பாக 12 இலக்க எண் ஆதார் அட்டையில் அச்சிடப்படாது. எனினும் அட்டைதாரரின் பெயர் இடம்பெற வாய்ப்பிருக்கிறது. ஆனால் நிச்சயமாக முகவரி இடம்பெறாது. பிரத்யேக செயலி அல்லது யுஐடிஏஐ நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட கருவியால் மட்டுமே கியூஆர் கோடை ஸ்கேன் செய்து தகவல்களை பெற முடியும். இதன்மூலம் மோசடிகள் முழுமையாக தடுக்கப்படும் .இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## சமூகநீதி வழங்குவதில் பட்டியலின மக்களுக்கும் திமுக துரோகம் செய்கிறது - அன்புமணி



சென்னை, நவ.25-

"சமூகநீதி வழங்குவதில் பட்டியலின மக்களுக்கும் திமுக அரசு துரோகம் செய்கிறது. உச்சநீதிமன்றம் ஆணையிட்டு ஓராண்டாகியும் உள் இட ஒதுக்கீடு வழங்க மறுப்பது ஏன்?" என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "இந்தியாவில் பட்டியலின மக்களில் சமூக ரீதியாகவும், கல்வி ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் பின் தங்கிய நிலையில் உள்ள மக்கள் தொடர்ந்து அதே நிலையிலேயே இருக்கிறார்கள்.

அவர்களின் நிலையை முன்னேற்றவும், கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் இட ஒதுக்கீட்டின் பயன்களை அவர்கள் வென்றெடுக்கவும் பட்டியலின மக்களுக்கு உள் இட ஒதுக்கீடு வழங்க மத்திய, மாநில அரசுகள் சட்டம் இயற்ற வேண்டும் என்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி பதவியிலிருந்து ஓய்வு பெற்றுள்ள நீதியரசர் பி.ஆர்.கவாய் கூறியிருக்கிறார்.

இது தொடர்பான உச்சநீதிமன்றத் தீர்ப்பை பெரும்பாலான மாநிலங்கள் செயல்படுத்தியுள்ள நிலையில், அத்தீர்ப்பை திமுக அரசு சற்றும் மதிக்காதது கண்டிக்கத்தக்கது.

தலைமை நீதிபதி பதவியிலிருந்து ஓய்வு பெற்றதை யொட்டி ஊடகங்களுக்கு நேர்காணல் அளித்திருக்கும் நீதியரசர் கவாய், சமூக, கல்வி, பொருளாதாரத்தில் பின் தங்கிய நிலையை அடிப்படையாகக் கொண்டு பட்டியலின மக்களுக்கு சமூகநீதி வழங்கப்பட வேண்டும் என்பதற்காகத் தான் பட்டியலின மக்களுக்கு உள் இட ஒதுக்கீடு வழங்கலாம் என்ற தீர்ப்பை தாம் இடம்பெற்றிருந்த 7 நீதிபதிகளைக் கொண்ட உச்சநீதிமன்ற அமர்வு கடந்த ஆண்டு அளித்ததாகவும் தெரிவித்திருக்கிறார்.

ஆனால், அந்தத் தீர்ப்பின் நோக்கங்களை திமுக அரசு நிறைவேற்றவில்லை. பட்டியலின மக்களுக்கு உள் இட ஒதுக்கீடு வழங்கலாம் என்று கடந்த ஆண்டு ஆகஸ்ட் ஒன்றாம் தேதி உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்திருந்த நிலையில், முதல் மாநிலமாக தெலங்கானா, கடந்த மார்ச் மாதம் பட்டியலினத்தவருக்கான 15% இட ஒதுக்கீட்டை முறையே 1%, 9%, 5% என 3 பிரிவுகளாக பிரித்து சட்டம் இயற்றியது. அதேபோல், கர்நாடகத்தில் பட்டியலின சமூகத்தினருக்கு வழங்கப்பட்டு வரும் 17% இட ஒதுக்கீட்டை பட்டியலினம் (வலது) 6%, பட்டியலினம் (இடது) 6%, பிற பட்டியலினத்தவருக்கு 5% என 3 பிரிவுகளாக உள் இட ஒதுக்கீடு வழங்கி அம்மாநில அரசு ஆணையிட்டுள்ளது.

ஆந்திராவும் பட்டியலின மக்களுக்கான 15% இட ஒதுக்கீட்டை முறையே 6.5%, 7.5%, 1% என 3 பிரிவுகளாக பிரித்து உள் இட ஒதுக்கீடு வழங்கியிருக்கிறது. ஆனால், தமிழ்நாட்டில் பாட்டாளி மக்கள் கட்சியின் வலியுறுத்தலைத் தொடர்ந்து 2009 ஆம் ஆண்டில் அருந்ததியர்களுக்கு வழங்கப்பட்ட உள் இட ஒதுக்கீட்டுக்குப் பிறகு, வேறு எவருக்கும் இன்று வரை உள் இட ஒதுக்கீடு வழங்கப் படவில்லை.

தமிழ்நாட்டில் அருந்ததியர்களையும் சேர்த்து பட்டியலினத்தில் உள்ள 76 சமூகங்களுக்கு 18% இட ஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது. அவர்களில் பெரும்பாலான சமூகங்களுக்கு இன்னும் இட ஒதுக்கீட்டின் பயன்கள் கிடைக்கவில்லை.

அதைக் கருத்தில் கொண்டு தான் பட்டியலின மக்களுக்கு உள் இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. ஆனால், அதன்பின் 16 மாதங்களாகியும் அந்தத் தீர்ப்பை திமுக அரசு செயல்படுத்த மறுக்கிறது.

உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியாக இருந்து ஓய்வு பெற்ற நீதியரசர் பி.ஆர்.கவாய் இடம் பெற்றிருந்த அமர்வு தான் வன்னியர்களுக்கு உள் இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்று கடந்த 2022ஆம் ஆண்டு ஆணையிட்டது. அதன்பின் இன்று வரை 1335 நாள்களாகியும் வன்னியர்களுக்கு உள் இட ஒதுக்கீடு வழங்கப் படவில்லை. இதற்காக ஏராளமான நடவடிக்கைகளை எடுத்தும், போராட்டங்களை நடத்தியும் கூட எந்த பயனும் ஏற்படவில்லை.

தமிழ்நாட்டைப் பொருத்தவரை வன்னியர்களாக இருந்தாலும், பட்டியலினத்தவர்களாக இருந்தாலும் அவர்களுக்கு சமூகநீதி வழங்கக்கூடாது என்பது தான் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசின் கொள்கையாக உள்ளது.

தமிழ்நாட்டின் இரு பெரும் சமூகங்களுக்கு அநீதி இழைக்கும் திமுக அரசுக்கு அந்த சமூகங்கள் வரும் தேர்தலில் மறக்க முடியாத பாடத்தை புகட்டும்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## சென்னை மாநகராட்சி சார்பில் 3,000 செல்லப் பிராணிகளுக்கு ஒரே நாளில் மைக்ரோ சிப் பொருத்தம்

சென்னை, நவ.25-


சென்னை மாநகராட்சி சார்பில் ஒரே நாளில் 3 ஆயிரத்து 91 செல்லப் பிராணிகளுக்கு மைக்ரோ சிப் பொருத்தப்பட்டுள்ளது.

வீடுகளில் செல்லப் பிராணிகளை வளர்ப்பதற்கு உரிமம் பெறுவதை சென்னை மாநகராட்சி கட்டாயமாக்கியுள்ளது. உரிமம் பெறாவிட்டால் வரும் நவ.24ம் தேதி முதல் ரூ.5 ஆயிரம் அபராதம் விதிக்கப்படும் என அறிவித்துள்ளது. மேலும் கடந்த ஒரு மாதமாக செல்லப் பிராணிகளுக்கு ரேபிஸ் தடுப்பூசி செலுத்துதல், நாய்களின் உரிமையாளர்கள் அவற்றை பல்வேறு காரணங்களுக்காக பராமரிக்காமல் தெருவில் விடுவதைத் தடுக்கவும், செல்லப் பிராணிகளுக்கு முறையாக தடுப்பூசிகள் செலுத்தப்பட்டு வருகிறதா என்பதை கண்காணிக்கவும் மைக்ரோ சிப்பை இலவசமாகப் பொருத்தி வருகிறது.

7 இடங்களில் சிறப்பு முகாம்கள்: இதற்கான சிறப்பு முகாம்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் நடத்தப்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக நேற்று புளியந்தோப்பு, கண்ணம்மாபேட்டை, லாயிட்ஸ் காலனி உள்ளிட்ட 6 இடங்களில் உள்ள செல்லப்பிராணி சிகிச்சை மையங்கள் மற்றும் சோழிங்கநல்லூரில் உள்ள நாய் இனக்கட்டுப்பாடு மையம் ஆகிய 7 இடங்களில் சிறப்பு முகாம்கள் நடைபெற்றன. இதில் நேற்று ஒரே நாளில் 3091 செல்லப் பிராணிகளுக்கு ரேபிஸ் நோய்த் தடுப்பூசி செலுத்தி, மைக்ரோ சிப் பொருத்தப்பட்டது. உரிமம் வழங்கும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

33,418 செல்லப் பிராணிகளுக்கு... இதுவரை 77,707 செல்லப் பிராணிகள் பதிவு செய்யப்பட்டு, அதில் 33,418 செல்லப் பிராணிகளுக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளதாக மாநகராட்சி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

## தமிழக மக்களை தேர்தல் ஆணையம் தோற்கடிக்க விடமாட்டோம்: காங்கிரஸ் மேலிட பொறுப்பாளர் சொல்கிறார்



சென்னை, நவ.25-

2026 சட்டப்பேரவைத் தேர்தலில் கூட்டணி தொடர்பாக திமுகவுடன் பேச்சுவார்த்தை நடத்த, காங்கிரஸ் மேலிட பார்வையாளர் கிரிஷ் சோடங்கர் தலைமையில் 5 பேர் கொண்ட ஒருங்கிணைப்புக் குழுவை கட்சித் தலைமை நியமித்துள்ளது.

அதில் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை, சட்டப்பேரவை காங்கிரஸ் தலைவர் ராஜேஷ் குமார், அகில இந்திய செயலாளர்கள் சூரஜ் ஹெக்டே, நிவேதித் ஆல்வா ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இக்குழுவின் முதல் ஆலோசனைக் கூட்டம் சென்னை சத்தியமூர்த்தி பவனில் நேற்று நடைபெற்றது. இதில் தமிழக காங்கிரஸின் தற்போதைய நிலை, பலம் மற்றும் பலவீனம், கட்சியை வளர்க்க என்ன செய்ய வேண்டும், தமிழகத்தில் காங்கிரஸுக்கு வெற்றி வாய்ப்புள்ள தொகுதிகள், நமது பலத்துக்கு திமுகவிடம் எத்தனை தொகுதிகள் கேட்கலாம் என்பன உள்ளிட்டவை குறித்து ஆலோசிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஐவர் குழு தனியாக ஆலோசனை நடத்தியது. பின்னர், குழுவின் தலைவர் கிரிஷ் சோடங்கர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: இந்த கூட்டத்தில் 2026 சட்டப்பேரவைத் தேர்தல் தொடர்பாக காங்கிரஸ் மூத்த தலைவர் களுடன் கலந்துரையாடினோம்.

வாக்குத் திருட்டுக்கு எதிராக தமிழ்நாடு காங்கிரஸ் நடத்திய கையெழுத்து இயக்கத்தில் 1 கோடியே 14 லட்சம் கையெ முத்துக்கள் பெறப்பட்டுள்ளன. காங்கிரஸ் நிர்வாகிகளும் தொண்டர்களும் இதில் சிறப்பாக செயல்பட்டு ள்ளனர். தமிழகத்தில் காங்கிரஸ் சிறப்பாகவே மக்கள் பணியாற்றி வருகிறது. இக்கூட்டத்தில் 2026 சட்டப்பேரவை தேர்தலை எப்படி எதிர்கொள்வது, கூட்டணி கட்சிகளை எப்படி அணுகுவது என்பது குறித்து ஆலோசிக்கப்பட்டது. பிஹார் தேர்தலில் பாஜக கூட்டணி எப்படி வெற்றி பெற்றது என்பது அனைவருக்கும் தெரியும். அந்த வெற்றி தேர்தல் ஆணையத்தால் திட்டமிட்டு கட்டமைக்கப்பட்டது. அந்த தேர்தலில் தேர்தல் ஆணையம் பிஹார் மக்களை தோற்கடித்துள்ளது. அதேபோல தமிழகத்தில் நடக்க விடமாட்டோம். தமிழக மக்களை தேர்தல் ஆணையம் தோற்கடிக்க விடமாட்டோம்.இவ்வாறு அவர் கூறினார்.



# தமிழ்நாடு அறிவியல் இயக்க காளையார்கோவில் கிளை மாநாடு சிவகங்கையில் அறிவியல் பூங்கா அமைத்திட கோரிக்கை







காளையார் கோவில், நவ.25-
சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஸ்ரீ சரஸ்வதி விகாஸ் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் தமிழ்நாடு அறிவியல் இயக்க காளையார்கோவில் கிளை மாநாடு சிறப்பாக நடைபெற்றது. கிளைத் தலைவர் வீரபாண்டி தலைமை வகித்து தலைமை உரையாற்றினார். மாவட்டக் கௌரவத் தலைவர் சாஸ்தா சுந்தரம் முன்னிலை வகித்தார். உறுப்பினர் அனிதா வரவேற்றார். மாவட்டச் செயலாளர் ஆரோக்கியசாமி செயல் அறிக்கை வாசித்தார். தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்டப் பொருளாளர் பிரபு அறிவியல் இயக்க செயல்பாடுகள் குறித்து நோக்க உரையாற்றினார். சிறப்பு விருந்தினர்களுக்கு பொன்துகில் அணிவித்தும் விஞ்ஞான துளிர் மற்றும் புத்தகம் நினைவு பரிசாக வழங்கியும் சிறப்பிக்கப்பட்டனர். தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்டச் செயலாளர் ஆரோக்கியசாமி அறிவியலை அறிவோம் அறிவியலால் இணைவோம் என்ற மையக்கருத்தை குறித்து சிறப்புரையாற்றினார். மாவட்டச் செயற்குழு உறுப்பினர் முருகானந்தம் கண்ணங்குடி கிளைச் செயலாளர் குருமூர்த்தி தமிழ்நாடு ஊரக வளர்ச்சி ஊராட்சி ஒன்றிய பணியாளர்கள் சங்கத்தின் மாநிலப் பொருளாளர் பத்மநாபன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். புதிய நிர்வாகிகளின் தேர்வில் கிளைத் தலைவராக வீரபாண்டி கிளைச் செயலாளராக அலெக்சாண்டர் துரை கிளைப் பொருளாளராக ஜெயப்பிரியா கிளை துணைத் தலைவராக ஆரோக்கிய அனிதா துணைச் செயலாளராக அனன்சியா கௌரவத் தலைவராக பத்மநாபன் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். காளையார்கோவில் சோமசுந்தர நகர் பகுதியில் உள்ள செட்டியூரணியில் நடையாளர்கள் நடப்பதற்கான நடைபாதை அமைத்திட கோரியும் காளையார்கோவிலுக்கும் கல்லலுக்குமிடையே நகரப் பேருந்து வசதி செய்து கொடுத்திடவும் சிவகங்கையில் அறிவியல் பூங்கா அமைத்து கொடுத்திடவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கிளைப் பொருளாளர் ஜெயப்பிரியா நன்றி கூறினார். செயற்குழு உறுப்பினர் செல்வம் உடற்கல்வி ஆசிரியர் கண்ணன் சத்தியேந்திரன் மதிவாணன் ஆசிரியைகள் ஷீலா ஜோஸ்பியூலா லூசியா கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



# குரோம்பேட்டை பேருந்து நிலையம் அருகே இருசக்கர வாகன ஓட்டிகளிடம் ஹெல்மெட் அணிவதின் அவசியம் குறித்து போக்குவரத்து போலீசார் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்

பல்லாவரம், நவ.25-
செங்கல்பட்டு மாவட்டம் குரோம்பேட்டை பேருந்து நிலையம் அருகே உள்ள சிக்கனல் குரோம்பேட்டை போக்குவரத்து போலீசார் ஹெல்மெட் அவசியம் குறித்து இருசக்கர வாகன ஓட்டிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தினர், விழிப்புணர்வின் போது வாகன ஓட்டிகளிடம் பேசிய காவல் உதவி ஆய்வாளர் இளையராஜா, 100 விபத்துக்கள் ஏற்பட்டால் அதில் 30 விபத்துகள் ஹெல்மெட் அணியாமல் வாகனம் ஓட்டி சென்றசவர்கள் தான், வாகன விபத்தின் போது உயிரிழப்பு ஏற்பட்டால் குடும்பத்தியே பாதிக்கும், உயிரிழப்பை தடுப்பதற்காக கட்டாயமாக ஹெல்மெட் அணிவிக்க வேண்டும் என்ற கோணத்தில் தான் 1000ம் ரூபாய் அபராத தொகை விதிக்கபட்டுள்ளதாகவும் தெரிவித்தார். இதில் போக்குவரத்து காவல் துறையினர் உடன் இருந்தனர்



# வேலூரில், பள்ளிக்கல்வித்துறை சார்பில், கலைத் திருவிழா போட்டியில் கலந்து கொள்ள செல்லும் மாணவர்களை மாவட்ட ஆட்சியர் வாழ்த்து தெரிவித்து கொடியசைத்து அனுப்பி வைப்பு

வேலூர், நவ.25-
வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, சத்து வாச்சாரி, மாவட்ட ஆட்சியரக வளாகத்தில், ஒருங்கி ணைந்த பள்ளிக் கல்வி சார்பில் 25.11.2025 கரூரில் நடைபெறவுள்ள 1ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு மாணாக்கர் களுக்கான மாநில அளவிலான கலைத் திருவிழா போட்டிகள் 2025 26ல் வேலூர் மாவட்டத் திலிருந்து கலந்து கொள்ள உள்ள 66 மாணவ, மாணவிகளை மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி, மாணவர்களுக்கு வாழ்த்து தெரிவித்து, கொடியசைத்து வழியனுப்பி வைத்தார். இந்நிகழ்வின்போது மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் பிரேமலதா, ஒருங்கிணைந்த பள்ளி கல்வி உதவி திட்ட அலுவலர் ஜோதீஸ்வரப்பிள்ளை, அரசு துறை சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் கலைத்திருவாளுக்கு செல்லும் மாணவர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

# பொதுமக்களுக்கு தேவையான சேவைகள் அனைத்தையும் அவர்களின் இருப்பிடத்திற்கே கொண்டு சேர்ப்பதை கருத்தில் கொண்டு தொடங்கப்பட்ட உங்களுடன் ஸ்டாலின் திட்டம் மூலம் மதுரை மாவட்டத்தில் 347 முகாம்கள் திட்டமிடப்பட்டுள்ளன

## இம்முகாம்களில் நகரப்பகுதிகளில் 13 துறைகள் மூலம் 43 சேவைகளும் ,ஊரகப்பகுதிகளில் 15 துறைகள் மூலம் 46 சேவைகளும் அளிக்கப்படுகிறது

மதுரை, நவ.25-
மதுரை மாவட்டத்தில் நடத்தப்பட்ட உங்களுடன் ஸ்டாலின் முகாம்களில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் சார்பில் மின் இணைப்பு எண் பெயர் மாற்றம் செய்வதற்கு 1135 மனுக்கள் பெறப்பட்டதில் 1098 மனுக்களுக்கும், புதிய மின் இணைப்பிற்கு 112 மனுக்கள் பெறப்பட்டதில் 98 மனுக்களுக்கும், வீதப்பட்டி மாற்றத்திற்கு 32 மனுக்கள் பெறப்பட்டதில் 25 மனுக்களுக்கும், மின் பளு மாற்றத்திற்கு 20 மனுக்கள் பெறப்பட்டதில் 20 மனுக்களுக்கும் மனுக்கள் பெறப்பட்ட அன்றே தீர்வு காணப்பட்டது. உங்களுடன் ஸ்டாலின் முகாமில் பெறப்பட்ட 1299 மனுக்களில் 1241 மனுக்களுக்கு அன்றே முகாமில் தீர்வு காணப்பட்டது.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் சார்பாக பொதுமக்கள் மற்றும் நுகர்வோரிடமிருந்து பெறப்படும் புகார்கள் அனைத்தையும் ஒருங்கிணைக்கும் மையமாக 24X7 மணி நேரமும் செயல்படும் மின்னகம் என்ற மின் நுகர்வோர் சேவை மையம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 20.06.2021 அன்று சென்னையில் துவக்கிவைக்கப்பட்டது.

மின் நுகர்வோர் சேவை மையம் அலைபேசி எண். 9498794987 ல் பெறப்படும் புகார்களை சென்னை மின்னகம் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொண்டு சம்பந்தப்பட்ட மின் பகிர்மான வட்டங்களுக்கு கணினி மூலம் அனுப்பப்படுகிறது.

மின்னகம் மூலம் பெறப்படும் புகார்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டு சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பு அலுவலர்களாலும் கண்காணிக்கப்படுகிறது.

மதுரை மாவட்டத்தில் மின்னகம் மின் நுகர்வோர் சேவை எண்ணை தொடர்பு கொண்டு கடந்த 25 ஜனவரி முதல் 6 நவம்பர் தேதி வரை பெறப்பட்ட 14,650 அழைப்புகளில் 14,635 அழைப்புகளுக்கு அன்றே தீர்வு காணப்பட்டு பயனாளிகளின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் பயன்பெற்ற மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த சபூர் மைதீன் தெரிவிக்கையில்,

என்னுடைய பெயர் சபூர் மைதீன், நான் விளாச்சேரி வடக்கு முஸ்லீம் தெருவில் வசித்து வருகிறேன். எனக்கு சில நாட்களாக என் வீட்டின் மின் இணைப்பு பெயர் மாற்றம் செய்ய வேண்டிய அவசியம் இருந்தது. அந்த மின் இணைப்பு, என் தந்தை பெயரில் இருந்தது. அதை என் பெயருக்கு மாற்ற வேண்டிய கட்டாயத்தில் இருந்தேன். எப்படி பெயர் மாற்றம் செய்வது, என்ற குழப்பத்தில் இருந்த பொழுது உங்களுடன் ஸ்டாலின் முகாம் நடைபெறவுள்ளது என்று எங்கள் வீட்டுக்கு வந்து பணியாளர்கள் விண்ணப்பம் கொடுத்தார்கள். உங்களுடன் ஸ்டாலின் முகாமில் நாம் கொடுக்கும் மனுக்களுக்கு உடனடியாக தீர்வு கிடைக்கும் என்று கூறினார்கள். அவர் கூறியதை கேட்டு நம்பிக்கையுடன் 20.08.2025 அன்று எங்கள் வீட்டுக்கு மிக அருகில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் முகாமில் மின் இணைப்பு பெயர் மாற்றம் செய்வதற்கு மனு கொடுத்தேன். நான் கொடுத்த மனுவினை அதிகாரிகள் மிகுந்த பொறுப்புடன் ஏற்று, ஆவணங்கள் எல்லாம் சரிபார்த்து, உடனடியாக பரிசீலித்து மின் இணைப்பு எண் 1401xxx கொண்ட மின் இணைப்பை தந்தை பெயரிலிருந்து என்னுடைய பெயருக்கு மாற்றி கொடுத்தார்கள். மிகவும் அதிக நாட்கள் ஆகும் என்று நான் நினைத்த வேலை தற்பொழுது சுலபமாக ஒரே நாளில் சரி செய்யப்பட்டது. இத்தகைய வாய்ப்பை ஏற்படுத்தி கொடுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவித்தார்.

# நெல்லை கவின் கொலை வழக்கு: சுர்ஜித் தந்தைக்கு எதிராக ஆதாரம் உள்ளதாக சிபிசிஐடி தகவல்

மதுரை, நவ.25-
நெல்லையில் மென்பொருள் பொறியாளர் கவின் கொலை நடந்தபோது, வழக்கில் கைதான சுர்ஜித்தின் தந்தையும், காவல் உதவி ஆய்வாளருமான சரவணன் சம்பவ இடத்தில் இருந்ததற்கு ஆதாரம் உள்ளது என உயர் நீதிமன்றத்தில் சிபிசிஐடி தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

நெல்லையில் மென்பொருள் பொறியாளர் கவின் காதல் விவகாரம் காரணமாக ஜூலை 27ல் கொலை செய்யப்பட்டார். இக்கொலை தொடர்பாக கவின் காதலித்து வந்த இளம் பெண்ணின் தம்பி சுர்ஜித், அவரது தந்தை காவல் உதவி ஆய்வாளர் சரவணன் ஆகியோரை போலீஸார் கைது செய்தனர். சுர்ஜித்தின் தாயாரும் காவல் உதவி ஆய்வாளருமான கிருஷ்ணகுமாரியும் கொலை வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விசாரணை நீதிமன்றத்தில் ஜாமீன் கோரி சரவணன் தாக்கல் செய்த மனு தள்ளுபடியானது. இதையடுத்து அவர் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் ஜாமீன் மனு தாக்கல் செய்தார். மனுவில், 'கொலை சம்பவம் நிகழ்ந்த அன்று ராஜபாளையத்தில் பணியில் இருந்தேன்.

ஊடகங்களில் செய்தி வெளியாகும் வரை கொலை தொடர்பாக எனக்கு எதுவும் தெரியாது. சுர்ஜித் எனது மகன் என்பதை தவிர கொலை சம்பவத்துக்கும் எனக்கும் எந்த தொடர்பும் இல்லை. ஜூலை 30ம் தேதியிலிருந்து சிறையில் உள்ளேன். எனவே ஜாமீன் வழங்க வேண்டும்' எனக் கூறியிருந்தார்.இந்த மனு நீதிபதி கே.முரளி சங்கர் முன்பு இன்று விசாரணைக்கு வந்தது. மனுதாரர் வழக்கறிஞர் வாதிடுகையில், 'மனுதாரர் ராஜபாளையம் பட்டாலியனில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறார். சம்பவம் நிகழ்ந்த அன்று மனுதாரர் பணியில் இருந்துள்ளார். சம்பவம் தொடர்பாக மனுதாரருக்கு எதுவும் தெரியாது. அதோடு வழக்கில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுவிட்டது. எனவே மனுதாரர் சிறையில் இருந்த காலத்தை கருத்தில் கொண்டு ஜாமீன் வழங்க வேண்டும்' என்றார். சிபிசிஜடி தரப்பில், 'மனுதாரர் சம்பவம் நடந்த நாளில் பணியில் இல்லை. விடுமுறையில் இருந்திருக்கிறார். கொலை சம்பவம் நிகழ்ந்த இடத்தில் மனுதாரர் இருந்ததற்கான ஆதாரம் உள்ளது. இதனால் ஜாமீன் வழங்கக் கூடாது' எனக் கூறப்பட்டது. கொலையான கவின் தாயார் தரப்பு வழக்கறிஞர் வாதிடுகையில், 'மனுதாரரின் தலையீடு காரணமாக எனது புகார் தாமதமாகவே விசாரணைக்கு எடுக்கப்பட்டது. வழக்கில் கூடுதல் வாதங்களை முன்வைக்க கூடுதல் அவகாசம் வேண்டும்' எனக் கூறப்பட்டது. இதையடுத்து விசாரணையை நவ.27க்கு நீதிபதி தள்ளிவைத்தார்.

# குரூப் 4 தேர்வுக்கான காலிப்பணியிடங்கள் 10 ஆயிரமாக அதிகரிக்க வேண்டும்: அமைச்சரிடம் தேர்வாளர்கள் கோரிக்கை





திருப்பூர், நவ.25-
தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் கிராம நிர்வாக அலுவலர்கள், இளநிலை உதவியாளர்கள், தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர்கள், உதவியாளர்கள், வனக் காவலர், வனக் காப்பாளர்கள் உள்ளிட்ட 3,935 காலிப் பணியிடங்களுக்கான டிஎன்பிஎஸ்சி குரூப் 4 தேர்வு கடந்த ஜூலை 12 ஆம் தேதி நடைபெற்றது. இதனை 11 லட்சத்து 48 ஆயிரத்து 19 பேர் தேர்வு எழுதினர்.

இந்தநிலையில் குரூப் 4 தேர்வின் மூலமாக 3,935 பணியிடங்கள் நிரப்பப்படவிருந்த நிலையில் 727 பணியிடங்கள் கூடுதலாக சேர்க்கப்பட்டுள்ளதாகவும் இதனால் பணியிடங்களின் எண்ணிக்கை 4,662 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளதாக டிஎன்பிஎஸ்சி அறிவிப்பு வெளியிட்டது.

இந்த நிலையில் குரூப் 4 தேர்வு காலி பணியிடங்களை 10 ஆயிரமாக அதிகரிக்க வேண்டும் என பல்வேறு மாவட்டங்களில் சேர்ந்த தேர்வாளர்கள் மனிதவளத்துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜை நேரில் சந்தித்து ஒரு கோரிக்கை மனு கொடுத்துள்ளனர் அதில் அவர்கள் கூறியிருப்பதாவது:

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வு வாரியம் நடத்தும் 'குரூப்4' தேர்வு மூலம் சாதாரணமாக 9 ஆயிரம், 10 ஆயிரம் காலிப்பணியி டங்கள் நிரப்பப்படும். ஆனால், இந்த ஆண்டு இந்த தேர்வு மூலம் 4,662 காலியிடங்கள் மட்டுமே நிரப்பப்பட உள்ளன

குரூப்4 தேர்வுக்காக லட்சக்கணக்கான தேர்வர்கள் படித்து வருகின்றனர். தற்போது காலியிடங்கள் மிகவும் குறைவாக அறிவிக்கப்பட்டிருப்பதால் எழுத்துத்தேர்வில் தேர்ச்சி பெற்று சான்றிதழ் சரிபார்ப்புக்கு வந்தால் கூட பலருக்கு வாய்ப்புகள் கிடைக்காது. 'கட்ஆப்' மதிப்பெண்ணில் விளம்பு நிலையில் இருப்பவர்கள் பலர் பாதிக்கப்ப டுவார்கள். எனவே, தமிழக அரசு குரூப் 4 காலிப்பணியிடங்களின் எண்ணிக்கையை 10ஆயிரமாக அதிகரிக்க வேண்டும்.

இவ்வாறு அந்த மனுவில் அவர்கள் கூறியுள்ளனர்.

மனுவை பெற்றுக் கொண்ட அமைச்சர் கயல்விழி செல்வராஜ் இது குறித்து முதலமைச்சரிடம் பேசி நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தார்.

# தமிழக வாழ்வுரிமைக் கட்சி சார்பாக சிங்கப்பெருமாள் கோவில் பகுதியில் ஒருங்கிணைந்த செங்கல்பட்டு காஞ்சிபுரம் மாவட்டம் கலந்தாய்வு கூட்டம்





செங்கல்பட்டு, நவ.25-
செங்கல்பட்டு மாவட்டம் தமிழக வாழ்வுரிமை கட்சியின் நிறுவனத் தலைவர் வேல்முருகன் அவர்களின் ஆணைக்கிணங்க ஒருங்கிணைந்த செங்கல்பட்டு காஞ்சிபுரம் மாவட்டம் கலந்தாய்வு கூட்டம் செங்கல்பட்டு காஞ்சிபுரம் ஒருங்கிணைந்த மாவட்ட அமைப்பு செயலாளர் சாமானியன் ஆர்.டி.எஸ்.தே.சுரேஷ் தலைமையில் செங்கல்பட்டு தொகுதி தலைவர் மண்ணிவாக்கம் என்.எஸ்.சீனிவாசன், தொகுதி செயலாளர் ஏ.வி.ஆர் அழகு, முன்னாள் மாவட்ட தலைவர் இரா. சதீஷ், முன்னாள் மாவட்ட செயலாளர் செல்லா, முன்னாள் மாவட்ட செயலாளர் ஆர்.கே. மணி, முன்னிலையில் சிங்கப்பெருமாள் கோவில் பகுதியில் பிரபல தனியார் திருமண மண்டபத்தில் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது இதில் சிறப்பு அழைப்பாளர்களாராக மாநில பொதுச் செயலாளர் தெழிலாளர் வாழ்வுரிமை சங்கம் கே.ஜம்புலிங்கம், மாநில துணை பொதுச் செயலாளர் தூ.வே.வேணுகோபால், மாநில பொருளாளர் ஆர்.ஜெகதீஷ் பாண்டியன், மாநிலத் மேட்டார் வாகண சங்க தலைவர் ஊரப்பாக்கம் சஞ்சிவிநாதன் ஆகியோர் கலந்து கொண்டு இக் கூட்டத்தில் வரும் சட்டமன்ற தேர்தலில் எவ்வாறு எதிர் கொள்வது பூத் கமிட்டிகள் வலிமைப்படுத்துதல் புதிய கட்சி உறுப்பினர்களை கட்சியில் அதிக அளவுசேர்த்தல் போன்ற பல்வேறு ஆலோசனைகள் கலந்தாய்வு கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் செங்கல்பட்டு மத்திய மாவட்டம் முன்னாள் மாவட்ட செயலாளர் செல்வா, முன்னாள் மாவட்ட செயலாளர் செங்கல்பட்டு தெற்கு மாவட்டம் ஆர்.கே.மணி, மதுராந்தகம் தொகுதி செயலாளர் இரா.சதீஸ், பொருளாளர் கமல், மதுராந்தகம் தொகுதி தலைவர் புண்ணியகோடி, திருப்போரூர் தொகுதி பொறுப்பாளர் அஜித்குமார், திருப்போரூர் சுரேஷ், காஞ்சிபுரம் தொகுதி தலைவர் உதயணன், காஞ்சிபுரம் தொகுதி செயலாளர் நரேஷ், உத்திரமேரூர் தொகுதி தலைவர் வினோத் குமார், உத்திரமேரூர் தொகுதி செயலாளர் அன்பரசு, தொகுதி பொறுப்பாளர் திருப்போரூர் தாமோதரன், தொகுதி பொறுப்பாளர் செய்யூர் சந்திரன், தொகுதி பொறுப்பாளர் செய்யூர் கோபால், தொகுதி பொறுப்பாளர் மதுராந்தகம் காமேஷ், செய்யூர் தொகுதி பொறுப்பாளர் போத்த ராஜா, தொகுதி பொறுப்பாளர் காஞ்சிபுரம் செல்வரசு, தொகுதி பொறுப்பாளர் உத்திரமேரூர் ஜெய்சங்கர், தொகுதி பொறுப்பாளர் உத்திரமேரூர் சுரேஷ், செங்கல்பட்டு தொகுதி பொறுப்பாளர் தினேஷ்குமார், தொகுதி பொறுப்பாளர் செங்கல்பட்டு சுரேஷ், மகளிர் அணி செயலாளர் அல்லி சந்திரன், ஆர்.துரைபாபு மற்றும் கூட்டத்தில் மாவட்ட ஒன்றிய நகர கிளைக் கழக நிர்வாகிகள் 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர் கூட்டத்தில் கலந்து கொண்ட கட்சித் தொண்டர்கள் நிர்வாகிகள் அனைவருக்கும் பிரியாணி பரிமாறப்பட்டது இறுதியாக நன்றியுரை செங்கல்பட்டு தெற்கு மாவட்டம் முன்னாள் மாவட்ட தலைவர் தொகுதி பொறுப்பாளர் செய்யூர் ஆ.கி.கங்காதுரை வழங்கினார்.




## மதுரை அமெரிக்கன் கல்லூரியின் பிரெஞ்சுத் துறை IATF ன் பயிலரங்கு - பிரெஞ்சுப் பேராசிரியரின் அறிமுக விழா

மதுரை, நவ.25-
மதுரை அமெரிக்கக் கல்லூரியின் பிரெஞ்சுத் துறை, இந்திய பிரெஞ்சு ஆசிரியர்கள் சங்கத்துடன் (IATF) இணைந்து, சர்வதேச பிரெஞ்சு ஆசிரியர் தினக் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, "Jeux pour dynamiser la classe de FLE: astuces et activités" என்ற தலைப்பில் ஒரு நாள் கற்பித்தல் பயிலரங்கு நடைபெற்றது.நிகழ்வின் சிறப்பம்சமாக, முன்னாள் பிரெஞ்சுப் பேராசிரியர் மினாட்சி சவுந்திர மேவின் புகைப்படத்தை அவரது மகன் முத்தரசு முன்னிலையில் திறந்து வைக்கப்பட்டது. முதல்வர் டாக்டர் பால் ஜெயகர் பேசுகையில் : கற்பித்தல் ஆண்ட்ராகோஜி ஹீட்டோராகஜி தொடர்ச்சியில் தற்போதைய மாற்றத்தில் மொழி ஆசிரியர்களுக்கு இதுபோன்ற பட்டறைகளின் பொருத்தம் தேவை, மேலும் சுய இயக்கம் மற்றும் சுயமாக தீர்மானிக்கப்பட்ட கற்றல் அணுகுமுறைகளின் வளர்ந்து வரும் முக்கியத்துவத்தின் தேவையும் இருக்கிறது, இந்த நாளின் கல்வி சிறப்பம்சமாக, புதுமையான வகுப்பறை விளையாட்டுகள் மற்றும் பிரெஞ்சு மொழியை வெளிநாட்டு மொழியாக (FLE) கற்பிப்பதை மேம்படுத்துவதற்கான உத்திகள் குறித்து கவனம் செலுத்தும் ஒரு சுவாரஸ்யமான தொழில்நுட்ப அமர்வு IATF இந்தியாவின் தலைவர் டாக்டர் சுமித்ரா முத்துக்குமார் நடத்தியது பெருமைக்குரியது என்றார். நிகழ்ச்சியில் விக்டர் பாக்கியராஜ், பாரதிதாசன், பிரெஞ்சு துறைத் தலைவர் சின்னதுரை பாண்டியன், பேராசிரியர்கள் ஏஞ்சல் சகயா அஜிதா, தங்கமணி, கவிதா ஜெகதேஸ்வரி, பாண்டிச்சேரி, மதுரை, திருச்சி, கோயம்புத்தூர், தேனி, காரைக்குடி, ஈரோடு, பொள்ளாச்சி மற்றும் மதுரையைச் சேர்ந்த பிரெஞ்சு ஆசிரியர்கள் அமெரிக்கன் கல்லூரியின் பிரெஞ்சுத் துறை மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

IATF தெற்கு மண்டல செயலாளர் ராஜபிரவீன் நன்றியுரையாற்றினார்.



## அண்ணலின் அம்பேத்கரின் திருவுருவச்சிலை நிறுவக் கோரி மனு

மதுரை, நவ.25-
மதுரை, வாடிப்பட்டி வட்டம்அலங்காநல்லூரில் அம்பேத்கரின் திருவுருவச் சிலை நிறுவக் கோரி தலித் விடுதலை இயக்கம் மாநிலத் தலைவர் ச.கருப்பையா தலைமையில் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரை சந்தித்து கோரிக்கை மனு கொடுக்கப்பட்டது. இம்மனுவில் அலங்காநல்லூர் தேர்வுநிலை பேரூராட்சியில் சுமார் 35% பட்டியலின வாக்காளர்களை கொண்டதாகவும் உள்ளது.

இந்நிலையில் அலங்கா நல்லூர் தேர்வுநிலை பேரூராட்சியில் உள்ள அலங்காநல்லூர் பழைய காவல் நிலையம் எதிரில் அண்ணலின் அம்பேத்கரின் திருவுருவச்சிலை நிறுவக் கோரி மனு அளித்தனர்.

இந்நிகழ்வில் திராவிடத் தமிழ் கட்சி விடுதலைவீரன்,சந்துரு. தமிழ் நாடு பெண்கள் சங்கம் நிவேதா, மக்கள் சட்ட உரிமை இயக்கம் அண்ணாத்துரை, இந்திய புரட்சிகர மார்க்சிஸ்ட் கட்சி பகத்சிங், மக்கள் பாதை பேரியக்கம் அமுதா,தமிழ் மாநில பகுஜன் சமாஜ் வாதி கட்சி மின்னல் வரதன், மக்கள் தேசம் கட்சி குருவிஜயன், தலித் விடுதலை இயக்கம் சேவியர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி தலைமையில் நடைபெற்றது

சேலம், நவ.25-
சேலம் மாவட்ட ஆட்சியரகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, தலைமையில் நடைபெற்றது. பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்களுக்கு உடனுக்குடன் தீர்வு காணவும், அடிப்படைத் தேவைகளுக்கு முக்கியத்துவம் அளித்திடவும், பெண்களின் முன்னேற்றத்திற்குத் தேவையான நடவடிக்கைகள் உள்ளிட்ட பணிகளில் அரசு அலுவலர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டுமெனவும், குறிப்பாக பொதுமக்கள் ஒருமுறை வழங்கிய மனுக்கள் மீண்டும் வராத வகையில் மனுவின் மீது உரிய தீர்வு வழங்கப் படுவதை அலுவலர்கள் உறுதி செய்திட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.



அதனடிப்படையில், இன்றைய தினம் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து முதியோர் உதவித்தொகை, இலவச வீட்டுமனைப்பட்டா, பட்டா மாறுதல், சாதிச்சான்று, வேலை வாய்ப்பு, வங்கிக்கடன்கள், கல்வி உதவித்தொகை, திருமண நிதியுதவி, மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகை, உதவி உபகரணங்கள், குடிநீர் வசதி, சாலை வசதி உட்பட அடிப்படை வசதிகள் மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி 325 மனுக்கள் வரப்பெற்றன. மேலும், மாற்றுத்திறனாளிகள் எவ்வித சிரமமும் இன்றி மனுக்களை வழங்கும் வகையில் மாவட்ட ஆட்சியரகத்தின் தரைத் தளத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கென நடத்தப்பட்டு வரும் குறைதீர் முகாமில் வீட்டுமனைப் பட்டா, உதவி உபகரணங்கள், பராமரிப்பு உதவித் தொகை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் குறித்து அளிக்கப்பட்ட 9 மனுக்களைப் பெற்று, உரிய நடவடிக்கை மேற்கொள்ள தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.இரா.பிருந்தாதேவி தெரிவித்தார். இதனை தொடர்ந்து, மக்கள் குறைதீர்க்கும் நாளில் தேசிய அளவில் நடைபெறும் விளையாட்டு போட்டிகளில் கலந்து கொள்ளும் மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்களுக்கு தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கி சேலம் கிளையின் சார்பில் ரூ.2.50 இலட்சம் மதிப்பில் 4 விளையாட்டு வீரர்களுக்கான சிறப்பு சக்கர நாற்காலியினை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, வழங்கினார்கள்.

# தாம்பரத்தில் 25 ஆயிரம் போலி வாக்குகள் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்டிருப்பதாக மாவட்ட கழகச் செயலாளர் குற்றச்சாட்டு

**சண்முகம் சாலையில் உள்ள வணிகவளாக கடைகளில் வாக்காளர்கள் இருப்பதாக சேர்க்கப்பட்டுள்ளது.**

**இடிந்து போன ரயில்வே குடியிருப்பில் வாக்காளர்கள் வசிப்பதாக போலியாக பதிவு செய்யப்பட்டுள்ளது.**

**செங்கல்பட்டு மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சிட்லப்பாக்கம் ச.ராஜேந்திரன் பேட்டி**

சேலையூர், நவ.25-
செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் போலி வாக்காளர் குறித்து வெளியான தகவல் பொதுமக்களை அதிர்ச்சியை ஏற்படுத்தியது.



இந்நிலையில் தாம்பரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 65 ஆவது வார்டு பகுதியில் நடைபெற்று வரும் எஸ் ஐ ஆர் பணிகளை செங்கல்பட்டு மேற்கு மாவட்ட அதிமுக செயலாளர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சிட்லபாக்கம் ச.ராஜேந்திரன் ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது செய்தியாளர்களிடம் பேசிய அவர் தாம்பரத்தில் 25 ஆயிரம் போலி வாக்குகள் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்டிருப்பதாக குற்றச்சாட்டினார்

தாம்பரம் சண்முகம் சாலையில் உள்ள வணிகவளாக கடைகளில் வாக்காளர்கள் வசிப்பது போல் காட்டி அங்கும் போலி வாக்காளர்கள் சேர்க்கப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டிய அவர். இடிந்து போன ரயில்வே குடியிருப்பில் வாக்காளர்கள் வசிப்பதாக போலியாக பதிவு செய்து அங்கும் வாக்காளர்கள் போலியாக சேர்க்கப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

இந்த எஸ் ஐ ஆர் பணிகள் மூலம் இந்த வாக்குகள் நீக்கப்படும் வாய்ப்பு கிடைத்திருப்பதாக கூறிய அவர் திமுகவை பொருத்தமட்டில் என் அவர்களின் டி என் ஏவில் போலி வாக்குகள் மூலம் வெற்றி பெறுவது தான் இலக்காக கொண்டிருப்பதாகவும் அவர் குற்றம் சாட்டினார். இதனை வாடிக்கையாக கொண்டிருந்த திமுக தற்போது போலி வாக்குகளை நீக்கும் எஸ் ஐ ஆர் பணிகளைக் கண்டு திணறி திக்கு முக்காடுவதாகவும் அவர் கூறினார்.

170 ஆவது பாகத்தில் 50 60 வாக்குகள் மட்டுமே உள்ள நிலையில் 250க்கும் மேற்பட்ட வாக்குகள் உள்ளாட்சி மன்ற தேர்தலில் பதிவாகி இருப்பதாக சுட்டிக்காட்டிய சிட்லபாக்கம் ராஜேந்திரன் இதுபோன்று போலி வாக்குகள் மூலம் வெற்றி பெற்ற திமுக எஸ் ஐ ஆர் பணிகளை கண்டு திணறுவதாக குற்றம் சாட்டினார்.

360 வாக்குகள் போலி வாக்குகள் என கூறும் நிலையில் தாம்பரம் மாநகராட்சி ஆணையர் 60 வாக்குகளை சேர்த்திருப்பதாக கூறும் நிலையில் மீதம் 300 வாக்குகள் போலியானவை என்பது உறுதிப்படக் கூடிய வகையில் ஆணையரின் பதில் இருந்திருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்

இந்த அறுபது வாக்குகள் குறித்து முழு விவரங்களையும் அதிமுக தரப்பில் இருந்து கேட்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்

இந்நிகழ்வில் தாம்பரம் மாமன்ற எதிர்க்கட்சித் தலைவரும் சேலையூர் பகுதி கழகச் செயலாளர் சேலையூர் ஜி.சங்கர் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



## குரோம்பேட்டையில் புதிய விதைகள் இயக்கம்' சார்பில் 50க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் பங்கேற்று ஆஸ்கார் உலக சாதனை படைத்தனர்

குரோம்பேட்டை, நவ.25-
தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் இளம் துணை முதலமைச்சர் தலைமையிலான திமுக அரசு, விளையாட்டை ஊக்குவித்து வெற்றி பெறும் வீர வீராங்கனைகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கி வரும் நிலையில், இளைஞர்கள் மத்தியில் பெரும் வரவேற்பு காணப்படுகிறது.

செங்கல்பட்டு மாவட்டம் கிண்டியில் உள்ள தனியார் பள்ளியில் நவம்பர் 9ஆம் தேதி நடைபெற்ற சிலம்பம் போட்டியில் மாநிலம் முழுவதும் இருந்து மூவாயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இதில் தாம்பரம் மாநகராட்சி 30வது வார்டு லட்சுமிபுரம் பகுதியில் செயல்படும் 'புதிய விதைகள் இயக்கம்' சார்பில் 50க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் பங்கேற்று ஆஸ்கார் உலக சாதனை படைத்ததை குறிப்பிடத்தக்கது.

இந்த சாதனையை கொண்டாடும் வகையில் சனிக்கிழமை பாராட்டு விழாவாக நடத்தப்பட்டது.

புதிய விதைகள் இயக்கத்தின் மாநில தலைவர் செந்தில்குமார், மாநில செயலாளர் சிலம்புகுடிமகன், மாநில பொருளாளர் கிருஷ்ணராஜ், சிலம்பம் மாஸ்டர் ராஜா ஆகியோர் தலைமையில் விழா நடைபெற்றது.

விழாவின் திறப்பு விருந்தினராக தாம்பரம் மாநகர அவை தலைவரும் தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ், பம்மல் வடக்கு பகுதி கழக செயலாளர் தா.ஜெயக்குமார், மாவட்ட மருத்துவர் அணி துணை அமைப்பாளர் டாக்டர் அரவிந்தராஜ், ஆகியோர் கலந்து கொண்டு அவர்களது கரங்களால் மாணவமாணவிகளுக்கு பதக்கங்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டு, அவர்களின் உலக அளவிலான சாதனை சிறப்பிக்கப்பட்டது.

## தி.மலையில் எல்லை தெய்வ வழிபாடு நிறைவு: வெள்ளி மூஷிக வாகனத்தில் விநாயகர் பவனி

திருவண்ணாமலை, நவ.25-
திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயில் கார்த்திகை தீபத்திருவிழாவை முன்னிட்டு 3 நாட்கள் நடந்த எல்லை தெய்வ வழிபாட்டின் நிறைவாக, வெள்ளி மூஷிக வாகனத்தில் விநாயகர் பவனி வந்து அருள்பாலித்தார். திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயில் கார்த்திகை தீபத்திருவிழாவையொட்டி எவ்வித இடையூறும் இல்லாமல், பக்தர்களுக்கு பாதிப்பு ஏற்படாமல் நடக்க வேண்டி கடந்த 3 நாட்களாக எல்லை தெய்வ வழிபாடு நடந்தது. அதன்படி, முதல் நாள் துர்க்கையம்மன் உற்சவமும், இரண்டாம் நாளான நேற்று முன்தினம் பிடாரியம்மன் உற்சவமும் நடந்தது. தொடர்ந்து, எல்லை தெய்வ வழிபாட்டின் நிறைவாக, நேற்று இரவு விநாயகர் உற்சவம் நடந்தது.

அதையொட்டி, அண்ணாமலையார் கோயில் 3ம் பிரகாரத்தில் அமைந்துள்ள சம்மந்த விநாயகர் சன்னதியில் நேற்று சிறப்பு பூஜை நடந்தது. இரவு வெள்ளி மூஷிக வாகனத்தில் விநாயகர் மாடவீதியில் பவனி வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். மேலும் ரிஷப வாகனத்தில் சண்டிகேஸ்வரரும் உடன் வலம் வந்தார். சுவாமி திருவீதி உலாவின்போது, விட்டு விட்டு லேசான மழை பெய்தது. ஆனாலும், மழையை பொருட்படுத்தாமல் ஏராளமான பக்தர்கள் தரிசனம் செய்தனர்.



■ மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே. பிரவீன் குமார் இ.ஆ.ப., வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் பணியனை 100% எய்திய வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மற்றும் வாக்குசாவடி நிலை மேற்பார்வையாளர்கள் ஆகியோருக்கு பாராட்டு சான்றிதழ் மற்றும் கேடயம் வழங்கினார்.



## நாகர்கோவில் சட்டமன்ற தொகுதி மாநகராட்சிக்குட்பட்ட வாக்காளர்களுக்கு வரும் புதன் கிழமை (26.11.2025) வரை அந்தந்த வார்டுகளுக்குட்பட்ட பகுதிகளில் சிறப்பு முகாம் நடைபெறுகிறது

கன்னியாகுமரி, நவ.25-
இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, கன்னியாகுமரி குளச்சல் சட்டமன்ற தொகுதி, வில்லுக்குறி பேரூராட்சி அலுவலகத்தில் கணக்கீட்டு படிவம் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யும் பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் இன்று (24.11.2025) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்

கன்னியாகுமரி மாவட்டத்தில், இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள சிறப்பு தீவிர திருத்தம் 2026 ஆனது 01.01.2026ஐ தகுதி நாளாக கொண்டு நடைபெற்று வருகிறது. அதனடிப்படையில் நமது கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட 6 சட்டமன்ற தொகுதிகளில் மொத்தம் 15,92,872 வாக்காளர்கள் உள்ளனர். ஒவ்வொரு சட்டமன்ற தொகுதி வாக்காளர்களின் வீடுகளுக்கு வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வீடுதோறும் சென்று கணக்கீட்டு படிவம் விநியோகம் செய்யும் பணி 04.11.2025 முதல் வீடு வீடாக சென்று 15,35,386 கணக்கீட்டு படிவங்கள் வழங்கப்பட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் நாளது தேதி வரை 96.39 சதவீதம் கணக்கீட்டு படிவங்கள் வாக்காளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் இன்று (24.11.2025) பிற்பகல் 12 மணி வரை 10,41,492 கணக்கீட்டு படிவங்கள் இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இதுவரை திரும்ப கிடைக்க பெறாத கணக்கீட்டு படிவங்களை திரும்ப பெறுவதற்கு நாகர்கோவில் சட்டமன்ற தொகுதி மாநகராட்சிக்குட்பட்ட வாக்காளர்களுக்கு மட்டும் அந்தந்த வார்டுகளுக்குட்பட்ட பகுதிகளில், இன்று முதல் புதன்கிழமை (26.11.2025) வரை சிறப்பு முகாம் நடைபெறுகிறது. வாக்காளர்கள் தாங்கள் பூர்த்தி செய்த தங்களது கணக்கீட்டு படிவங்களை நடைபெறும் முகாம்களுக்கு சென்று வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடம் திரும்ப ஒப்படைக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும் கன்னியாகுமரி, குளச்சல், பத்மநாபபுரம், விளவங்கோடு மற்றும் கிள்ளியூர் ஆகிய சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட வாக்காளர்கள் வட்டாட்சியர் அலுவலகம், வட்டார வளர்ச்சி அலுவலகம், பேரூராட்சி மற்றும் ஊராட்சி அலுவலகங்களுக்கு இன்னும் ஓரிரு நாட்களுக்குள் சென்று தங்களது வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடம் தங்களது பூர்த்தி செய்த கணக்கீட்டு படிவங்களை வழங்கி, வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு முழு ஒத்துழைப்பு வழங்க கேட்டுக்கொள்கிறேன். மேலும் பூர்த்தி செய்யப்பட்ட கணக்கீட்டு படிவங்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்வதன் மூலம் உங்களது பெயர் வரும் 2026 வரைவு வாக்காளர் பட்டியலில் இடம் பெறும். குளச்சல் சட்டமன்ற தொகுதி, வில்லுக்குறி பேரூராட்சி அலுவலகத்தில் கணக்கீட்டு படிவம் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யும் பணிகள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறு மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப, அவர்கள் தெரிவித்தார்.

நடைபெற்ற ஆய்வில் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள், துறை அலுவலர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.




■ நவம்பர் 28 முதல் டிசம்பர் 10 வரை தமிழ்நாட்டின் சென்னை மற்றும் மதுரை நகரங்களில் நடைபெற உள்ள ஹாக்கி ஆடவர் ஜூனியர் உலகக்கோப்பை 2025 போட்டிக்கான கோப்பையை வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் வே.இரா. சுப்புலெட்சுமி, நேற்று விஐடி பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அறிமுகப்படுத்தினார். இந்நிகழ்வில் வேலூர் சட்டமன்ற உறுப்பினர் ப.கார்த்திகேயன் மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், 1 வது மண்டலக்குழுத்தலைவர் புஷ்பலதா வன்னியராஜா, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் பிரேமலதா, மாவட்ட விளையாட்டு அலுவலர் சுப்பிரமணியன், மாமன்ற உறுப்பினர்கள் க.சு.சண்முகம், விமலா சீனிவாசன். வேலூர் மாவட்ட ஆக்கி சங்க செயலாளர் கிளமெண்ட் லூர்து ராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# மதுரை ராமேஸ்வரம் நெடுஞ்சாலை செல்லும் சாலையில் அக்கரை ஸ்நாக்ஸ்ல் தரமற்ற காலாவதியான உணவுப்பொருள்கள் பறிமுதல் அதிரடி ஆய்வு

மதுரை, நவ.25-

மதுரை ராமேஸ்வரம் நெடுஞ்சாலை செல்லும் சிலைமான் பகுதியில் இயங்கி வரும் பிரபலமான அக்கறை ஸ்நாக்ஸ் பேக்கரியில் தரமற்ற காலாவதியான உணவுப் பொருட்கள் விற்பனை செய்வதாக அப்பகுதியில் தகவல் பெறப்பட்டது. நமது சிறப்பு நிருபர் மேற்கொண்ட கள ஆய்வில் பல அதிர்ச்சி தகவல்கள் கிடைக்கப் பெற்றன இங்கு விற்பனை செய்யப்படும் பேக்கரி, கார வகைகளில் விலை மற்றும் தயாரிப்பு விபரம் ஸ்டிக்கரில் கூடுதலாக ஒட்டி இருந்தது. விற்பனையாளரிடம் கேட்ட பொழுது விலை உயர்வு காரணமாக ஸ்டிக்கர் ஒட்டப்பட்டு உள்ளது என மிகவும் சாதாரணமாக பதில் அளித்தனர். இக்கடைக்கு ராமேஸ்வரம் சுற்றுலாத்துறை செல்லும் பொதுமக்கள் பெரும் அளவில் சிற்றுண்டி ,தேனீர் அருந்தி செல்வதும். அருகில் தனியார் பள்ளியில் ஏராளமான மாணவர்கள் உணவு பொருட்களை வாங்கி உண்ணுவதும் குறிப்பிடத்தக்கது. கடையின் முகப்பில் அனைவரையும் கவரும் வகையில் கலப்படமில்லாத நிறமற்ற பொருட்களைக் கொண்டு சுத்தமான சுகாதார முறையில் தயாரிக்கப்பட்ட உணவுகள் என்று பெரிய அளவில் விளம்பர பதாகை வைத்துக்கொண்டு இதுபோன்று உணவு பொருள்களில் பொறுப்பில்லாமல் நடத்தி வருவது ஆச்சரியத்தை அளித்தது,







இது குறித்து மாவட்ட உணவு கட்டுப்பாடு துறை அலுவலர் செல்வராஜ் அவரிடம் புகார் தெரிவித்ததன் பேரில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. விசாரணையில் உணவு பாதுகாப்பு உரிமம் பெறப்பட்டுள்ளது காட்சி படுத்தபடவில்லை , பேக்கரி கார வகைகளில் விலை மற்றும் தயாரிப்பு விபரம் ஸ்டிக்கரில் ஒட்டி இருந்தது, விலை உயர்வு காரணமாக ஸ்டிக்கர் ஒட்டப்பட்ட ரூ இரண்டு ஆயிரம் மதிப்புள்ள 6 கிலோ கார வகைகள் பறிமுதல் செய்யப்பட்டது மேலும் குளிர்சாதன பெட்டியில் வைத்து இருந்த தயிர் சாதம், கிரேவி பறிமுதல் செய்யப்பட்டது.

ரூபாய் 3 ஆயிரம் அபதாரம் விதிக்கப்பட்டு நிறுவனத்தின் மீது பிரிவின் கீழ் 55 நோட்டீஸ் வழங்கப்பட்டது. இதுபோன்று மதுரையில் உள்ள பல்வேறு பிரபல நிறுவனங்களில் இது போன்ற திடீர் ஆய்வு நடத்தினால் பல்வேறு உண்மைகள் வெளிவரலாம் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.







# மதுரையில் "ராமன் எத்தனை ராமனடி" டிஜிட்டல் ரிலீஸ் : கொட்டும் மழையிலும் சிவாஜியை கொண்டாடி தீர்த்த ரசிகர்கள்

மதுரை, நவ.25-

மதுரை அண்ணாமலை திரையரங்கில் நடிகர் திலகத்தின் உன்னதமான காவியமான ராமன் எத்தனை ராமனடி திரைப்படம் டிஜிட்டல் வடிவில் வெளியாக இருக்கிறது என்ற தகவலை கேள்விப் பட்டதுமே சிவாஜி ரசிகர்களுக்கு இறக்கை முளைக்க ஆரம்பித்து விட்டது. அண்ணாமலை திரையரங்கில் கொட்டும் மலையில் குடைகள் பிடித்தவாறு நீண்ட வரிசையில் நின்று கொண்டு இருந்தனர். மேலும்வான வேடிக்கையுடன் மேளதாள சத்தங்கள் உடன் இந்த படத்தின் பிரத்தியேக காட்சியை ரசிகர்கள் கொண்டாடித் தீர்த்தனர்.

பலரும் பல முறை திரையரங்கில் பார்த்து ரசித்த படம். 55ஆண்டுகளுக்கு பிறகு வெளியாகும் ஒரு கருப்பு வெள்ளை திரைப்படத்தை காண 150 பேருக்கும் மேல் திரண்டிருந்தனர். இந்த நிகழ்வில் குணசேகர், குணாமூவீஸ் தலைமை வகித்தார். இன்பசேகரன், சிவாஜி ஃபன் ஆர்ட்ஸ், பச்சைமணி, சிவாஜி புகழ்பரப்பும் குழு ,பிரபு ரசிகர் மன்றம் மாவட்ட தலைவர் வெங்கடேஷ், காங்கிரஸ் ஐ.சிலுவை உசிலை. அமுதுராஜன், விரா ட்டிப்பத்து. சோமசுந்தரம், சிவாஜி மன்றம் பக்ருதீன் உட்பட பலர் கலந்து கொண்டனர். இப்படம் குறித்து நம்மிடம் பேசிய சிவாஜி ரசிகர் ஆசிரியத் தேவன் , படத்தின் negative ஏற்ப முடிந்த அளவு டிஜிட்டல் வடிவில் நன்றாக செய்திருந்தார்கள். பாடல்களின் originality ஐ மாற்ற வில்லை. பெரிய திரையில் சினிமாஸ் கோப்பில் நடிகர் திலகத்தின் அழகு முகத்தை பார்க்கும் போது நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை வீர சிவாஜி பகுதி மட்டும் கலரில் உள்ளது. இறுதியில் அம்மாடி பாடல் மீண்டும் ஒரு முறை காட்டப்படுகிறது.

அனைத்து காட்சிகளும் ஹவுஸ் புல்லாக இருப்பது சிவாஜி கணேசனின் காலம் கடந்த பெருமை. எதையும் எதிர்பாராமல் அவர் ஆற்றிய கலைப்பணி நிலைத்து நிற்கிறது என பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.






■ தென்காசி மாவட்டம் கடையநல்லூர் துரைச்சாமிபுரம் அருகேதனியார் பேருந்துகள் ஒன்றுக்கொன்று நேருக்கு நேராக மோதி பயங்கர கோர விபத்து... பேருந்தில் பயணித்த 50க்கும் மேற்பட்ட நபர்கள் கை,கால், தலை என அனைத்தும் உடைந்த நிலையில் சிகிச்சைக்காக அனுமதி.. இந்த கோர விபத்தில் பெண்கள் உட்பட ஆறுக்கும் மேற்பட்ட நபர்கள் உயிரிழந்ததாக மருத்துவமனை தகவல். பலர் கவலைக்கிடமான நிலையில் உள்ளனர்.



■ தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் மக்கள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டத்தில் பொது மக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடம் கோரிக்கை மனுக்களை பெற்று மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

# பழனியில் அன்புள்ளம் அறக்கட்டளை சார்பாக தூய்மை பணியாளர்களுக்கு மழை கோட் வழங்கும் நிகழ்வு நடைபெற்றன

திண்டுக்கல், நவ.25-

திண்டுக்கல் மாவட்டம் பழனி வ.உ.சி மத்திய பேருந்து நிலைய வளாகத்தில் செயல்பட்டு வரும் தூய்மை பணியாளர்கள் அலுவலகத்தில் மழைக்காலம் தொடங்கியதால் தூய்மை பணியாளர்களுக்கு உதவிடும் வகையில் அன்புள்ளம் அறக்கட்டளை சார்பாக நகராட்சிக்கு உட்பட்ட 15,16,17,26,ஆகிய வார்டுகளில் பணிபுரியும் பிரிவு இரண்டு மண்டல தூய்மை பணியாளர்கள் 27 நபர்களுக்கு மழை கோட் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றன.

தொடர்ந்து இந்நிகழ்வின் தலைமையாக அறக்கட்டளை தலைவர் முகமது உசேன் செயலாளர் சையது இப்ராஹிம் பொருளாளர் குழந்தை வேல் இணைச் செயலாளர் கல்யாண சுந்தரம் மற்றும் இவ்விழாவின் சிறப்பு அழைப்பாளராக பொள்ளாச்சி பாராளுமன்ற தொகுதி அதிமுக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ராஜாரவிவர்மா. மதன் பாபு கலந்து கொண்டு தூய்மை பணியாளர்களுக்கு மழை கோட் வழங்கினார்.

தொடர்ந்து தூய்மை பணியாளர்களை ஊக்குவி க்கும் வகையில் மழைக்காலத்தில் உரிய நேரத்தில் இதுபோன்ற பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கி வரும் அன்புள்ளம் அறக்கட்டளை நிர்வாகிகளுக்கு தூய்மை பணியாளர்கள் மற்றும் மண்டல அதிகாரிகள் தூய்மைப் பணி மேற்பார்வையாளர்கள் உள்ளிட்டோர் தங்களது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொண்டனர்...









# மேட்டுப்பாளையம் தாலுகாவில் பொதுமக்கள் நலனுக்காக உயிர் காக்கும் நடமாடும் ஐசியூ ஆம்புலன்ஸ் சேவை துவக்கம் அவசர சிகிச்சைக்கு (9002 9002 08)

கோவை, நவ.25-

கோவை மாவட்டம், காரமடையில் மேட்டுப் பாளையம் தாலூகா பொது மக்களின் நலனுக்காக, "மக்கள் சேவையே மகேசன் சேவை" என்னும் கோட்பாட்டிற்க்கு ஏற்ப வாழ்ந்த காரமடை திரு. எம்.கே.கே.விஜயன் அவர்களின் நினைவாக அவரது புதல்வர் காரமடை அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில் அறங்காவலர் குழு தலைவர் எம்.கே.கே.வி.தேவ் ஆனந்த் அவர்கள் உயிர் காக்கும் உயர் சிகிச்சை கருவிகளுடன் கூடிய ஐசியூ ஆம்புலன்சை காரமடை சௌமியா மருத்துவமனை மூலமாக பொதுமக்களுக்கு அர்ப்பணித்துள்ளார்கள். இந்த ஐசியூ ஆம்புலன்ஸ் சேவைகளை டாக்டர்கள் ஜெயராமன் மற்றும் சௌமியாவதனா விவரித்தனர். இந்த ஆம்புலன்சில் 24 மணி நேரமும் பயிற்சி பெற்ற மருத்துவ குழுவினர் தீவிர மற்றும் அவசர சிகிச்சைக்காக உள்ளனர். மேலும், சுவாச உதவி கருவி, இதய துடிப்பு மீட்பு கருவி, நோயாளிகளின் உடல்நிலை கண்காணிப்புக் கருவி உள்ளிட்ட சிறப்பு அம்சங்களுடன் உள்ளது. அவசர சிகிச்சைக்கு (9002 9002 08) என்ற என்னை தொடர்பு கொள்ளலாம். இந்நிகழ்ச்சியில் எம்.கே.கே.குடும்பத்தார் மற்றும் சௌமியா மருத்துவமனை நிர்வாகத்தினர் ரோட்டரி சங்க நிர்வாகிகள் முன்னாள் துணை ஆளுநர் சா.ஞானசேகரன், காரமடை ரோட்டரி சங்கத் தலைவர் குமணன் நடராஜன், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சிவசதீஷ், மாவட்ட அறங்காவலர் குழு நியமன உறுப் பினர் கவிதா கல்யாணசுந்தரம், திமுகவினர் மாவட்ட அவைத்தலைவர் புருஷோத்தமன், தலைமை செயற்குழு உறுப்பினர் டி.ஆர்.சண்முகசுந்தரம், காரமடை ஒன்றிய செயலாளர்கள் எஸ்.எம்.டி.கல்யாணசுந்தரம், சு.சுரேந்திரன், பிரதீப், முன்னாள் காரமடை நகர செயலாளர் வெங்கடேஷ், அணி நிர்வாகிகள் பிரஸ்குமார், ராம்குட்டி, காங்கிரஸ் கட்சி மாவட்ட தலைவர் அறிவு ரங்கராஜ் முன்னாள் தலைவர் வி.எம்.சி.மனோகரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்








# மூன்றாவது கண் மூலமாக பிடிபட்ட சரித்திர பதிவேடு குற்றவாளிகள் சிவகங்கை காவல்துறையினர் அதிரடி நடவடிக்கை

சிவகங்கை, நவ.25-

சிவகங்கை மாவட்டத்தில் தற்போது குற்ற சம்பவம் நடவடிக் கைகள் அதிகரித்துள்ளது அதனை தவிர்க்கும் வகையில் காவல் துறையினர் பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகின்றனர் சிவகங்கை மாவட்டத்தில் புதர்கள் நிறைந்த காட்டுப் பகுதியில் குற்றவாளிகள் சதி திட்டம் தீட்டி குற்றங்களை நிகழ்த்துவதும், தப்பி மறைந்து கொள்வதும் தொடர்கதை ஆகி வருகிறது.சரித்திர பதிவேடு குற்றவாளிகள் பிறந்தநாள் கொண்டாடுவதாக காவல்துறையினருக்கு ரகசிய தகவல் கிடைத்துள்ளது அதன் அடிப்படையில் சிவகங்கை அருகே காட்டுப் பகுதியில் பிறந்தநாள் கொண்டாடிய ரவுடிகளை ட்ரோன் மூலம் கண்காணித்து சுற்றி வளைத்தனர் இரு சரித்திர பதிவேடு குற்றவாளிகளை காவல்துறையினர் பிடித்து அவர்களிடமிருந்து 2 வாள்கள், 5 இருசக்கர வாகனங்கள் மற்றும் தடை செய்யப்பட்ட பொருள்கள் பறிமுதல் செய்தனர் சிவகங்கை காவல்துறையினர் அதிரடி நடவடிக்கை எடுத்துள்ளனர்

நேற்று கீழக்குளம் கண்மாய் பகுதியில் பிரபல ரவுடியின் பிறந்தநாளை சக ரவுடிகள் இணைந்து கேக் வெட்டி கொண்டாடுவதாக காவல்துறையினருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதனை அடுத்து துணை காவல் கண்காணிப்பாளர் தலைமையிலான 40 பேர் கொண்ட சிறப்பு காவல் குழு அமைக்கப்பட்டு காட்டுப் பகுதியில் உள்ள ரவுடிகளை பிடிக்க திட்டமிட்டனர். அவர்கள் இருக்கும் இடத்தை கண்டறிய வானில் இயக்கப்படும் கண்காணிப்பு சாதனம் ட்ரோன் உதவியுடன் 10 க்கும் மேற்பட்ட குற்றவாளிகள் கூடியிருந்த இடம் துல்லியமாக கண்டறியப்பட்டது. பின்னர் காட்டைச் சுற்றி வெளியேறும் அனைத்து பாதைகளும் காவல்துறையினர் அடைத்தனர். அப்போது கன மழை பெய்த நிலையிலும் காவல்துறையினர் காட்டினுல் புகுந்து குற்றவாளிகளை பிடிக்க முயன்றனர். அதில் சரவணன், பால்பாண்டி என இரு ரவுடிகளை கைது செய்து அவர்களிடமிருந்து 2 வாள்கள்,5 இருசக்கர வாகனங்கள் மற்றும் தடை செய்யப்பட்ட பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. எஞ்சியவர்கள் தப்பி சென்ற நிலையில் அவர்களை பிடிக்கும் நடவடிக்கையில் சிவகங்கை மாவட்ட காவல்துறையினர் துரிதமாக ஈடுபட்டுள்ளனர். மேலும் கைது செய்யப்பட்ட இருவரும் வழிப்பறிக் கொல்லையில் ஈடுபட்டதை ஒப்புக்கொண்டனர். அவர்களிடமிருந்து பறிக்கப்பட்ட நகைகள் உள்ளிட்ட பொருட்களை மீட்டெடுக்கும் பணியும் நடைபெற்று வருகிறது.

காட்டுப் பகுதியில் ஒளிந்திருக்கும் குற்றவாளிகளை பிடிக்க ட்ரோன் கண்காணிப்பு கேமரா மூலம் காவல்துறையினர் தொடர்ந்து நடவடிக்கையில் ஈடுபடுத்தப்படுவார்கள் என சிவகங்கை மாவட்ட காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.









Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161